2022 ஏப்ரல் 6]

நிலையம் அமைப்பதற்கான பணிகளை விரைவாக முடிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 61, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ.மா. மான்ராஜ், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

61—

ஆரம்ப சுகாதார நிலையம்

***5295—திரு. இ.மா. மான்ராஜ்:**

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, S. கொடிக்குளத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

30 ஆயிரம் மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி 8 கிலோ மீட்டருக்குமேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. S. கொடிக்குளம் கிராமத்தில் துணை சுகாதார நிலையம் ஒன்று இயங்கி வருகிறது. S. கொடிக்குளம் கிராமம், வத்திராயிருப்பு ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றிய மக்கள்தொகை 1 இலட்சத்து 29 ஆயிரத்து 742 ஆகும். இவ்வூராட்சி ஒன்றியத்தில் நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஏற்கெனவே சிறப்பாகச் செயல்பட்டு வருவதால், மக்கள்தொகை அடிப்படையில், விருதுநகர் மாவட்டம், சிவகாசி சுகாதார மாவட்டம், வத்திராயிருப்பு ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள S. கொடிக்குளம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மான்ராஜ் அவர்கள், இருக்கையில் இல்லை.*

[2022 ஏப்ரல் 6

மாண்புமிகு உறுப்பினர் திரு. T.K. அமுல் கந்தசாமி அவர்கள்.

திரு. T.K. அமுல் கந்தசாமி: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா ஆகியோரை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய ஸ்ரீவில்லிபுத்தூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. மான்ராஜ் அவர்கள், உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் வர இயலவில்லை. அவரின் சார்பாக, S. கொடிக்குளத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன். மேலும், எனது தொகுதியான வால்பாறை தொகுதியில், கோட்டூர் பேரூராட்சிக்குட்பட்ட, கோட்டூர் அரசு மருத்துவமனை மற்றும் பெத்தநாயக்கனூர் ஆரம்ப சுகாதார நிலையம் ஆகியவற்றிற்குப் போதிய இட வசதி இருக்கின்றது. எனவே, அவற்றை அரசு, தரமுயர்த்துமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, S. கொடிக்குளம் பேரூராட்சியைப் பொறுத்தவரை, அதில் 15 வார்டுகள் இருக்கின்றன. அங்கே இருக்கின்ற வீடுகளின் எண்ணிக்கை 3,636 ஆகும். அந்தப் பேரூராட்சியின் மொத்த மக்கள்தொகை 14,115. ஏற்கெனவே, கொடிக்குளம், கூமாப்பட்டி, நெடுங்குளம் ஆகிய இடங்களில் 3 துணை சுகாதார மையங்கள் இருக்கின்றன. 3 துணை சுகாதார மையங்களும் நலவாழ்வு மையங்களாக மிகச் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. எனவே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, எதிர்காலத்தில் இந்தச் சுகாதார மையங்களைத் தரமுயர்த்துவதற்கான நடவடிக்கைகள் எடுப்பதற்கான சாத்தியக்கூறுகள் ஆராயப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல், சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்ற, அவருடைய தொகுதிக்குட்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரமுயர்த்தப்படுவதற்கான சாத்தியக்கூறுகளும் ஆராயப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

2022 ஏப்ரல் 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி கு. மரகதம் குமரவேல் அவர்கள்.*

திருமதி கு. மரகதம் குமரவேல்: *மாண்புமிகு புரட்சித் தலைவர் மற்றும் புரட்சித் தலைவி அம்மா ஆகியோரை வணங்குகிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஆகியோரையும் வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுராந்தகம் தொகுதியில், அச்சரப்பாக்கம் ஒன்றியத்தில் உலகப் புகழ்பெற்ற பறவைகள் சரணாலயம், வேடந்தாங்கல் ஊராட்சியில் அமைந்துள்ளது. இந்த ஊராட்சி மக்கள் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கரிக்கிலி, வெள்ளபுத்தூரைச் சேர்ந்த பொதுமக்கள் சிகிச்சை பெற சுமார் 20 முதல் 25 கிலோ மீட்டர் தூரம் உள்ள எல். எண்டத்தூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்படுகின்றது. அவர்கள் சிகிச்சை பெறுவதற்காக மிகவும் அவதிப்படுகின்றார்கள். வேடந்தாங்கல் ஊராட்சி மற்றும் அதனைச் சுற்றியுள்ள 20–க்கும் மேற்பட்ட கிராமங்களில் சுமார் 13 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர். இதைக் கருத்தில் கொண்டு அப்பகுதியில் வாழும் பொதுமக்களின் நலன் கருதி, ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு அரசு முன்வருமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய தீவிர வழிகாட்டுதலின்படி, ஒன்றிய அரசின் சார்பில் 25 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் 25 புதிய நகர்ப்புர சுகாதார மையங்கள் அமைக்க அனுமதி பெறப்பட்டிருக்கிறது. அவை எங்கெங்கே அமைய வேண்டும், மக்கள்தொகை எவ்வளவு போன்ற பல்வேறு விஷயங்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய வழிகாட்டுதலின்படி, புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமையவிருக்கின்றன. அப்படி அமையும்பட்சத்தில், அவர் சார்ந்திருக்கின்ற, அவர் கேட்டிருக்கின்ற பகுதியில், விதிமுறைகளுக்குட்பட்டிருப்பின், புதிய ஆரம்ப சுகாதார நிலையம்*

அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். தங்கப்பாண்டியன் அவர்கள்.

திரு. எஸ். தங்கப்பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராஜபாளையம் தொகுதி, ஸ்ரீவில்லிபுத்தூர் யூனியன், களங்காபுரி ஊராட்சியிலுள்ள மக்கள் சிகிச்சைக்காக 15 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள மம்சாபுரம் ஆரம்ப சுகாதார நிலையம் செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். எனவே, அங்கு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 10—55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சொல்லியிருப்பதைப்போல, 25 ஆரம்ப சுகாதார நிலையங்களும் எங்கெங்கே மக்கள்தொகை அதிகமாக இருக்கின்றதோ, ஏற்கெனவே இருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு இடையேயான 8 கிலோ மீட்டர் இடைவெளி போன்ற விதிமுறைகள் சரியாக இருப்பின், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுசென்று, நிச்சயமாக புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி அவர்கள்.

திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் நேற்று ஒரு நிகழ்ச்சியிலே இந்தக் கருத்தை வெளியிட்டிருந்தார்கள். அதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2022 ஏப்ரல் 6]

காரணம், புதிதாக 25 ஆரம்ப சுகாதார நிலையங்கள் தமிழகத்திற்கு வருவது என்பது மிக்க மகிழ்ச்சியான ஒரு விஷயம். அதில், ஒன்றை, கிராமப்புறங்கள் நிறைந்த பகுதியான வேப்பனஹள்ளி தொகுதிக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒதுக்கித் தருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே 2,282 ஆரம்ப சுகாதார நிலையங்களும், 8,713 துணை சுகாதார நிலையங்களும், 272 வட்டார மற்றும் வட்டம்சாரா மருத்துவமனைகளும், 36 அரசு மருத்துவக் கல்லூரிகளும், ஆக 11,303 மருத்துவ கட்டமைப்புகள் தமிழகத்திலே இயங்கிக் கொண்டிருக்கின்றன. தற்போது, புதிதாக ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் நகர்ப்புர சுகாதார மையங்கள் 50 வரவிருக்கின்றன. ஏற்கெனவே சொன்ன பதில்தான் இதுவும். இதைக்காட்டிலும், இன்னொரு கூடுதலான தகவல். நாளை மறுநாள் வணக்கத்திற்குரிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், தமிழகத்திலுள்ள 'தொலைதூர கிராமங்களுக்கும் மருத்துவ சேவை' என்கின்ற வகையில், ஒரு புதிய திட்டத்தைத் தொடங்கி வைக்கவிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதனடிப்படையில், 389 வாகனங்களில் ஒரு மருத்துவர், ஒரு செவிலியர், ஒரு களப் பணியாளர் மட்டுமல்லாமல், ஒரு* pharmacist *என்கின்ற வகையில் 4 பேர் கிராமங்களுக்கே சென்று, வாகனங்களின்மூலம் மருந்துகளைத் தருகின்ற, மருத்துவம் பார்க்கின்ற சிறப்பான ஒரு திட்டத்தை மேற்கொள்ளவிருக்கிறார்கள். அப்படி மேற்கொள்ளும்போது நிச்சயம் தமிழகத்தின் ஒட்டுமொத்த ஒன்றியங்களுக்கும் இந்த வாகனங்கள் விரைவில் செல்லவிருக்கின்றன என்கின்ற தகவலை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து, விடைபெறுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டுள்ள 25 ஆரம்ப சுகாதார நிலையங்களில், என்னுடைய தொகுதி, கடற்கரை கிராமமான கூத்தங்குழி ஒன்றையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

[2022 ஏப்ரல் 6

வினா வரிசை எண் 62, மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. சிவகாமசுந்தரி, மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

62—

பால் குளிரூட்டும் நிலையம்

***12039—திருமதி க. சிவகாமசுந்தரி**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணராயபுரம் தொகுதி, உப்பிடமங்கலம் பேரூராட்சி, உப்பிடமங்கலத்தில் பால் கொள்முதல் மற்றும் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சா.மு. நாசர், பால்வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் தொகுதி, உப்பிடமங்கலம் பேரூராட்சி, உப்பிடமங்கலத்தில் பால் கொள்முதல் நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளன. எனினும், பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லையென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. சிவகாமசுந்தரி அவர்கள்.

திருமதி க. சிவகாமசுந்தரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் தொகுதி, உப்பிடமங்கலம் பேரூராட்சி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் கால்நடை வளர்ப்பு மற்றும் பால் உற்பத்தி செய்யும் தொழில் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. தினசரி, சுமார் 50 ஆயிரம் லிட்டர் பால், குறைந்த விலையில் தனியார் நிறுவனங்களால் கொள்முதல் செய்யப்படுகிறது. அந்தப் பகுதியில் வசிக்கும் மக்கள் பயன்பெறும் வகையில், உப்பிடமங்கலம் பேரூராட்சி, உப்பிடமங்கலத்தில் பால் கொள்முதல் நிலையம் மற்றும் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கும்பட்சத்தில், மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். எனவே, அரசு ஆவன செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்து தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.